www.Padasalai.Net

மாநில திட்ட இயக்ககம்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை - 600 006

அனுப்புநர்

மாநில திட்ட இயக்குநர்,

மாநில திட்ட இயக்ககம்,

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,

பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,

கல்லூரி சாலை, சென்னை - 06.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்:1533/C7/வாஇ/ஒபக/2024, நாள்:02.09.2024

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை - 2024-25 ஆம் ஆண்டில் அரசு, தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் வாசிப்பு இயக்கம் - செயல்படுத்துதல் - வழிகாட்டு நெறிமுறைகள் நினைவூட்டல் - சார்ந்து

பார்வை: இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்:1533/C7/வாசிப்பு இயக்கம்/ஒபக/ 2024, நாள்:13.06.2024 மற்றும் 09.07.2024

*****

பார்வையின் படி, வாசிப்பு இயக்ககம் நூலகப் பாட வேளைகளில் வாசிப்பு இயக்கப் புத்தகங்களை பயன்படுத்துதல் மற்றும் EMIS தளத்தில் பதிவேற்றுதல் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் TNTP வழியாக 4 முதல் 9 வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்களுக்கு விரைவில் பயிற்சி தர திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி,

- 4 முதல் 9 வரை வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்களை TNTP வழியாக தரும் பயிற்சியினை தவறாமல் பங்கேற்க உரிய அறிவுரை வழங்குதல் வேண்டும்.
- 70 வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் மற்றும் 1 வாசிப்பு இயக்க கையேடு ஆகிய புத்தகங்கள் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் சென்று சேர்ந்ததை உறுதி செய்தல் வேண்டும்.
- கடந்த வருடம் வழங்கப்பட்ட 53 புத்தகங்கள் மற்றும் தற்போது வழங்கிய 71 புத்தகங்களை EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். (ஏற்கனவே Module பயன்பாட்டில் உள்ளது)

www.Padasalai.Net

- வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் பயன்படுத்துதல் சார்ந்து நூலக பாட வேளையில் உரிய வழிகாட்டுதல் படி நடத்தப்பட வேண்டும்.

- மாணவர்கள் வாசிப்பு இயக்க நிலையில் எந்த நிலையில் உள்ளனர் (நுழை, நட, ஓடு, பற) என்ற விவரங்களை EMIS தளத்தில் உள்ளீடு செய்தல் வேண்டும். இதனை 2024 - 25 ஆம் கல்வியாண்டில் செப்டம்பர், டிசம்பர் மற்றும் மார்ச் மாதங்களில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

  உள்ளீடு செய்யும் முறை: Teacher login-->Vaasippu Iyakkam-->Students status-->select Term1-->select class/sec--> Update data.

- அனைத்து அரசு பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட வாசிப்பு இயக்கக் கையேட்டினை தலைமை ஆசிரியர் உட்பட அனைத்து ஆசிரியர்களும் படித்து வாசிப்பு இயக்கத்தின் நோக்கம் பற்றி புரிந்துக்கொண்டு செயல்படுத்திட அறிவுரை வழங்குதல் வேண்டும்.

- மேற்காண் வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாக செயல்படுத்துமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

பார்வையில் கண்ட வழிகாட்டுதல்கள்

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

நகல்:

1. பள்ளிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம் (தகவலுக்காக)
2. தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம்(தகவலுக்காக)